## வகுப்பு - 7 - பருவம் - 3 - வேதியியல், 3 - பலபடி வேதியியல்

**வினாக்கள்:**

1. பாலிமர் என்ற சொல் உருவான மொழி ______.

   1) தமிழ் 2) லத்தின் 3) கிரேக்கம் 4) ஆங்கிலம்

2. ஒற்றைப்படிகள் ______ பிணைப்பால் இணைந்து உருவாகும் நீண்ட சங்கிலித்தொடர் பலபடி ஆகும்.

   1) அயனி 2) சகப்பிணைப்பு


   3) ஹைட்ரஜன் பிணைப்பு 4) ஈதல் சகப் பிணைப்பு

3. சரியான இணையைத் தேர்வு செய்க.

   1) poly - சிறிய அடிப்படை அலகு 2) mer - பல

   3) எத்திலீன் - ஒற்றைப்படி 4) வினைல் குளோரைடு - பலபடி

4.



ஐக் குறிப்பது

   1) மீத்தேன் 2) கால்சியம் குளோரைடு

   3) வைனைல்குளோரைடு 4) எத்திலீன் குளோரைடு

5. நமது உடல் ______ பலபடிகளால் ஆனது

   1) செயற்கை 2) இயற்கை

   3) இயற்கை மற்றும் செயற்கை 4) மேற்கண்ட அனைத்தும்

6. இயற்கை பலபடிகளுக்கு எடுத்துக்காட்டு ______.

   1) புரதம் 2) கார்போஹைட்ரேட்

   3) செல்லுலோஸ் 4) மேற்கண்ட அனைத்தும்

7. புரதங்கள் ______ வகையான அமினோ அமிலங்களால் ஆனது ஆகும்.

LIVEWORKSHEETS

1) 40　　2) 30　　3) 20　　4)10

8. புரதப் பலபடிகளுக்கு எடுத்துக்காட்டு ______.

1) டி.என்.ஏ　　2) நைலான்　　3) PVC　　4) கண்ணாடி

9. கார்போஹைட்ரேட் பலபடிகளுக்கு உதாரணம் ______.

1) செல்லுலோஸ்　　2) கைட்டின்　　3) லிக்னின்　　4) இவை அனைத்தும்

10. பின்வருவனவற்றுள் ரேயான் தயாரிப்பில் பயன்படும் வேதிப்பொருள்கள் எவை?

1) சோடியம் கார்பனேட், கார்பன் டை சல்பைடு, கந்தக அமிலம்

2) சோடியம் பை கார்பனேட், கார்பன் டை சல்பைடு, கந்தக அமிலம்

3) சோடியம் கார்பனேட், கார்பன் டை ஆக்ஸைடு, கந்தக அமிலம்

4) சோடியம் பை கார்பனேட், கார்பன் டை ஆக்ஸைடு, கந்தக அமிலம்

11. ரேயான் தயாரிப்பில் வேதிப்பொருள்களில் செல்லுலோஸ் கரைந்து உருவாகும் திரவத்தின் பெயர்

1) மால்டோஸ்　　2) சுக்ரோஸ்　　3) குளுக்கோஸ்　　4) விஸ்கோஸ்

12. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்க.

1) கம்பளி　　2) பட்டு　　3) ரேயான்　　4) பருத்தி

13. பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க.

1) இயற்கை இழை - பட்டு　　2) செயற்கை இழை – நைலான்

3) பகுதி செயற்கை இழை – ரேயான்　　4) செயற்கை இழை – கம்பளி

14. பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

1) கைட்டின்　　2) லிக்னின்　　3) செல்லுலோஸ்　　4) அக்ரிலிக்

15. பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

1) பாலியெஸ்டர்　　2) நைலான்　　3) கம்பளி　　4) அக்ரிலிக்

16. பொருத்துக

i) நைலான் - a) கந்தக அமிலம், சோடியம் கார்பனேட்

ii) ரேயான் - b) அடிப்பிக் அமிலம், ஹெக்ஸா மெத்திலீன் டை அமீன்

iii) நெகிழி - c) வினைல் குளோரைடு

iv) PVC - d) எத்திலீன், புரொப்பிலீன்

1) i - b　ii - d　iii - a　iv - c　　2) i - d　ii - c　iii- b　iv - a

LIVEWORKSHEETS

3) i - a ii - b iii - c iv - d 4) i - b ii - a iii - d iv - c

17. சரியான இணையைத் தேர்ந்தெடுக்க.

1) லாமா -- கம்பளி 2) யாக் – பட்டு 3) மல்பெரி – நைலான் 4) கனிமம் – சணல்

18. தாவரங்களுக்கு கட்டமைப்பைக் கொடுப்பதில் முக்கியமானது ______.

1) கைட்டின் 2) லிக்னின் 3) செல்லுலோஸ் 4) சர்க்கரை

19. பூஞ்சைகளின் செல்சுவர், நண்டுகள், சிலந்திகள் போன்ற பூச்சிகளின் எலும்பு கூடுகளில் காணப்படுவது

1) சர்க்கரை 2) லிக்னின் 3) கைட்டின் 4) செல்லுலோஸ்

20. பின்வருவனவற்றுள் ஒற்றைப்படிகளின் பண்புகள், பிணைப்பு அடிப்படையில் பலபடிகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?

1) நைலான், செல்லுலோஸ், ரேயான் 2) லிக்னின், கைட்டின், ரேயான்

3) இழைகள், நெகிழிகள், புரதங்கள் 4) செல்லுலோஸ், அக்ரிலிக், பட்டு

21. பொருத்துக

i) இயற்கை பலபடி - a) நைலான், பாலியெஸ்டர்

ii) செயற்கை பலபடி - b) நமது உடல்

iii) புரதப் பலபடி - c) ரேயான்

iv) பகுதி செயற்கை பலபடி - d) டி.என்.ஏ, நொதிகள்

1) i - b ii - d iii - a iv - c 2) i - d ii - c iii- b iv - a

3) i - a ii - b iii - c iv - d 4) i - b ii - a iii - d iv - c

22. பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

1) டி.என்.ஏ 2) லிக்னின் 3) கைட்டின் 4) செல்லுலோஸ்

23. 1946 ல் முதல் ரேயான் தொழிற்சாலை எந்த மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது?

1) தமிழ்நாடு 2) கேரளா 3) ஆந்திரா 4) கோவா

24. தனித்த ஒன்றைத் தேர்வு செய்க.

1) மல்பெரி 2) டஸ்ஸர் 3) கம்பளி 4) எரி

25. செயற்கை பட்டு என அழைக்கப்படுவது ______.

1) மல்பெரி 2) டஸ்ஸர் 3) ரேயான் 4) நைலான்

LIVEWORKSHEETS

26. தவறான இணையைத் தேர்வு செய்க.

1) மல்பெரி, முகா, எரி - பட்டு

2) பருத்தி, பட்டு, கம்பளி - இயற்கை இழை

3) எத்திலீன், புரொப்பிலீன் - பகுதி செயற்கை இழை

4) நைலான், பாலியெஸ்டர் - செயற்கை இழை

27. நெகிழிப்பொருள்கள் தயாரிப்பின் போது கிடைக்கும் துணை விளை பொருள்களிலிருந்து உருவாக்கப்படுவது ______.

1) ரேயான் 2) நைலான் 3) பேக்கலைட் 4) அக்ரிலிக்

28. வெப்பத்தினால் இறுகும் நெகிழிக்கு உதாரணம் ______.

1) ரேயான் 2) நைலான் 3) பேக்கலைட் 4) அக்ரிலிக்

29. பின்வருவனவற்றுள் சங்கிலிகளுக்கு இடையே குறுக்குப் பிணைப்பு கொண்ட நெகிழி வகை எது?

1) இளகும் நெகிழி 2) இறுகும் நெகிழி

3) இளகும், இறுகும் நெகிழி 4) பாலி எத்திலீன்

30. தீயணைப்பு வீரர்களின் ஆடைகள் தயாரிக்கப் பயன்படுவது ______.

1) மெலமைன் 2) பேக்கலைட் 3) பாலியெஸ்டர் 4) கம்பளி

31. ரெசின் குறியீடு அடிப்படையில் நெகிழி எத்தனை வகைப்படும்?

1) 6 2) 7 3) 9 4) 5

32. பெட்ரோலிய எண்ணெய், வாயுக்களை பகுதிப் பொருள்களாக பின்னக் காய்ச்சிவடித்தல் முறையில் பிரித்தெடுக்கும் பொழுது கிடைக்கும் துணை விளைபொருள்கள் எவை?

1) பென்சீன், ஈத்தேன் 2) எத்திலீன், புரொப்பிலீன்

3) கார்பன், பென்சீன் 4) மீத்தேன், ஈத்தேன்

33. பின்வருவனவற்றுள் நெகிழிகளை உருவாக்கும் அடிப்படை கட்டமைப்புப் பொருள்கள் எவை?

1) பென்சீன், ஈத்தேன் 2) எத்திலீன், புரொப்பிலீன்

3) கார்பன், பென்சீன் 4) மீத்தேன், ஈத்தேன்

34. கூற்று 1: தொழில்நுட்பம், கட்டுமானம், சுகாதாரம், போக்குவரத்து துறைகளில் நான் அரும்பங்கு ஆற்றுகிறேன்.

கூற்று 2: குறைந்த எடை, அதிக வலிமை, சிக்கலான பல வடிவங்கள் எடுக்கும் தன்மை உடையவன்.

LIVEWORKSHEETS

கூற்று 3: புற ஊதாக் கதிர்களை தடுக்கும் சக்தியும் எனக்கு உண்டு.

மேற்கண்ட கூற்றுகளின் அடிப்படையில் நான் யார் எனக் கண்டறிக.

1) பட்டு 2) ரேயான் 3) நெகிழி 4) அக்ரிலிக்

35. நெகிழி உறிஞ்சுக்குழாய்கள் தயாரிக்கப் பயன்படுவது ______.

1) அசிட்டிலீன் 2) எத்திலீன் 3) புரொப்பிலீன் 4) வினைல் குளோரைடு

LIVEWORKSHEETS